**விரைவு நீதிமன்றம் (நடுவர் நிலை),**
**கோவில்பட்டி**
முன்னிலை: **திரு. கி. ஆனந்த், எம்.எல்.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், கோவில்பட்டி(மு.கூ.பொ).

2026 வது வருடம், ஜீன் மாதம், 15–ம் நாள் திங்கள்கிழமை

**சுருக்கு முறை விசாரணை வழக்கு எண். 76/2021**
**CNR. No. TNTT12-004393-2021**

| வ.எண்; | | **புகார்தாரர் விபரங்கள்** |
|---|---|---|
| 1. | புகார்தாரரின் பெயர் | P. மணிவண்ணன் |
| 2 | புகார்தாரரின் தந்தை பெயர் | பரதாழ்வார் |
| 3 | புகார்தாரரின் வேலை | – |
| 4 | புகார்தாரரின் முகவரி | க.எண்.33, 34, மணிவண்ணன் எண்டர்பிரைசஸ், மார்க்கெட் ரோடு, கோவில்பட்டி |
| 5 | புகார்தாரரின் வயது | 42/2018 |
| | | **எதிரியின் விபரங்கள்** |
| 6 | எதிரிகளின் பெயர் | 1. பவுல்தாஸ்<br>2. நிர்வாக இயக்குநர், வசந்தம் குமாரி சிட் பண்ட் (பி) லிட்., |
| 7 | எதிரியின் தந்தை பெயர் | 1) –<br>2)– |
| 8 | எதிரிகளின் வேலை | வசந்தம் குமாரி சிட் பண்ட் (பி) லிட்., நிர்வாக இயக்குநர் |
| 9 | எதிரிகளின் முகவரி | 41D/15A, பஞ்சவர்விளை கோவில்தெரு, 2–வது சந்து, கட்டையம் விளை, பார்வதிபுரம், நாகர்கோவில் |
| 10 | எதிரிகளின் வயது | 1) 55/2018<br>2) – |
| | | **தேதி** |
| 11 | சம்பவம் | 19.12.2017 |
| 12 | புகார் | 12.03.2018 |



K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:56:12 +0530

| | | |
|---|---|---|
| 13 | எதிரிகளின் கைது | எதிரிகள் கைது செய்யப்படவில்லை. |
| 14 | பிணை விபரம் | எதிரிகள் பிணை பெறவில்லை. |
| 15 | வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி | 07.04.2022 |
| 16 | வழக்கு விசாரணை முடிக்கப்பட்ட தேதி | 12.06.2026 |
| 17 | உத்தரவு | எதிரிகள் மீது மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிகளை குவி.மு.ச 255(2)ன் கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து ஆறு மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், நஷ்டஈடு தொகையாக ரூ.17,75,000/-/- காசோலை திருப்பப்பட்ட நாள் முதல் நஷ்ட ஈடு தொகை கொடுக்கும் வரை ஆண்டு வட்டி 9% கணக்கிட்டு எதிரிகள், புகார்தாரருக்கு கொடுக்கும்படியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 18 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 19 | காலதாமதத்திற்கான விளக்கம் | சாட்சிகளின் விசாரணையினால் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. |

இவ்வழக்கு கடந்த 12.03.2018 அன்று நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, கோவில்பட்டியில் தாக்கல் செய்யப்பட்டு Crl.M.P.NO.2168/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு கடந்த 14.12.2021 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன் 12.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.J.மகேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.G.ஆழ்வார்சாமி சிவக்குமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, இரு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.



K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:56:17 +0530

## தீர்ப்புரை

1. இவ்வழக்கானது புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டிற்கு எதிரிகள் மீது விசாரணை நடத்தக் கோரி குவி.மு.ச 255(2)ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்புகார் ஆகும்.

**புகார்மனுவின் சுருக்கம்:**

2. புகார்தாரர், மணிவண்ணன் எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் பெயிண்ட் வியாபாரம் செய்து வருகிறார். 1வது எதிரி, 2வது எதிரி சிட் பண்ட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஆவார். புகார்தாரரும், 1வது எதிரியும் நண்பர்கள் என்ற அடிப்படையில், 1வது எதிரி, 2வது எதிரி நிறுவனத்தில் புகார்தாரர் சீட்டு கட்டினால் கட்டும் பணத்திற்கு 100 சதவீதம் உத்தரவாதம் தருவதாக உறுதியளித்துள்ளார். மேலும் 2வது எதிரி நிறுவனம் மதிப்பு மிக்க நிறுவனம் என்றும், தென் மாவட்டத்தில் நற்பெயருடன் செயல்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார். மேற்படி 1வது எதிரியின் வார்த்தையினை நம்பி 2வது எதிரி நிறுவனம் நடத்தும் ரூ.20,00,000/− க்கான சீட்டு குழுவில் புகார்தாரர் இணைந்துள்ளார். மேற்படி சீட்டு குழுவில் இணைந்த புகார்தாரர், ஒவ்வொரு மாதமும் சீட்டு தவணை தொகையினை தவறாமல் செலுத்தி வந்துள்ளார். இறுதியாக 19வது சீட்டு ஏலத்தில் 10.11.2017 அன்று கலந்து கொண்ட புகார்தாரர் ரூ.17,75,000/−க்கு ஏலம் எடுத்துள்ளார்.

3. மேற்படி சீட்டு ஏலம் எடுத்த அன்றே சீட்டு தொகையினை எதிரிகள், புகார்தாரருக்கு செலுத்தி விட வேண்டும். ஆனால் எதிரிகள் அன்றைய தேதியில் சீட்டு பணத்தினை புகார்தாரரிடம் செலுத்தவில்லை. அதற்கு பதிலாக எதிரிகள் கணக்கு வைத்துள்ள ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா வங்கி, பார்வதிபுரம் நாகர்கோவில் கிளையின் காசோலை எண்.723019 கொண்ட ரூ.17,75,000/−ற்கான காசோலையினை 29.11.2017 என தேதியிட்டு 1வது எதிரி கையொப்பமிட்டு, புகார்தாரர் பெயருக்கு வரைந்து புகார்தாரரிடம் கொடுத்துள்ளார்.

4. அதன்பிறகு மேற்படி காசோலையினை கடந்த 18.12.2017 அன்று புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள ஆக்சிஸ் வங்கி, கோவில்பட்டி கிளையில் காசோலையை பணமாக்கும் பொருட்டு தாக்கல் செய்தபோது, எதிரிகளின் காசோலை "Funds Insufficient" என்ற வங்கி குறிப்புடன் 19.12.2017 அன்று திருப்பப்பட்டுள்ளது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:56:24 +0530

5. அதன்பின் புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலமாக 17.01.2018 ம் தேதி எதிரிகளுக்கு அனுப்பிய அறிவிப்பானது "Left" என்ற காரணம் குறிப்பிட்டு 20.01.2017 அன்று திருப்பப்பட்டுள்ளது. மேலும் எதிரிகள் இதுவரை பதிலோ, பணமோ தரவில்லை. எதிரிகளின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தும், எதிரிகள் வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்து மோசடி செய்து ஏமாற்றி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்தை செய்துள்ளார்கள். எனவே, எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனையும், புகார்தாரருக்கு இழப்பீடும் வழங்க வேண்டுமென்று புகார்தாரர் தரப்பில் 12.03.2018 அன்று குற்ற முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. பின்பு மேற்படி புகாரானது பரிசீலிக்கப்பட்டு போதிய முகாந்திரம் இருந்ததால் 14.12.2021 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். குவி.மு.ச 255(2)ன் கீழ் எதிரிகளிடம் மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டு குறித்து 07.04.2022 அன்று கேள்வி கேட்கப்பட்டபோது எதிரிகள் இது பொய் வழக்கு என்று மறுத்துள்ளார்கள்.

7. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பு.சா.ஆ. 1 முதல் பு.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

<u>புகார்தாரர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்</u>

8. பு.சா.1 மணிவண்ணன் தனது முதல் விசாரணையில் புகார் மனுவை ஒத்து முதல்விசாரணையை ஆணையுறுதி பத்திரமாக தாக்கல் செய்துள்ளார். பு.சா.1–ன் மூலமாக 1. 29.11.2017 தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, பார்வதிபுரம் நாகர்கோவில் கிளையின் ரூ.17,75,000/– ற்கான காசோலை எண்.723019 கொண்ட காசோலை அசல் (**பு.சா.ஆ.1**), 2. 19.12.2017 ம் தேதியிட்ட ஆக்சிஸ் வங்கி, கோவில்பட்டி கிளையின் காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை கணினி வழி சான்று (**பு.சா.ஆ.2**), 3.17.01.2018 தேதியிட்ட எதிரிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்கள் மற்றும் இரண்டு அஞ்சலக ரசீதுகள் அசல் (**பு.சா.ஆ.3**), 4.18.01.2018 தேதியிட்ட 1வது எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக



K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:56:31 +0530

உறை அசல் **(பு.சா.ஆ.4),** 5. 2016–2017 வரையிலான எதிரிகள் நிறுவனம் புகார்தாரருக்கு வழங்கிய சீட்டு ரசீதுகள்–19 வரிசைகள் அசல் **(பு.சா.ஆ.5),** 6. 01.04.2017 முதல் 27.11.2017 வரையுள்ள புகார்தாரரின் பேங்க் ஆஃப் இந்தியா, கோவில்பட்டி கிளையின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் **(பு.சா.ஆ.6)** ஆகியவை சான்றாவணங்களாக குறியிடப்பட்டுள்ளது.

9. இத்துடன் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சிகளின் விசாரணை முடிக்கப்பட்டது.

10. குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமானவற்றை 06.01.2023 அன்று கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் விளக்கி வினவியபோது எதிரிகள் சாட்சியத்தை பொய் என்று மறுத்து தனது தரப்பில் சாட்சியம் உண்டு என்று கூறியுள்ளனர்.

11. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியிடப்படவில்லை என்பதால் இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

12. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக ஆராய்ந்து பரிசீலிக்கப்பட்டது.

13. குற்றமுறையீட்டாளர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மாற்றுமுறையாவணங்கள் சட்டப் பிரிவு 138ன் படியான எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டினை நிரூபிக்க குற்றமுறையீட்டார் தன்னை பு.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளதாகவும், புகார்தாரர் மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு கீழான தேவைகளை கடைபிடித்துள்ளதாகவும், பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி சாட்சியம் மற்றும் ஆவணங்கள் வாயிலாக குற்றமுறையீட்டாளர் தனது வழக்கினை நிரூபித்துள்ளதாகவும், எதிரிகள் காசோலை மற்றும் அதில் உள்ள கையொப்பத்தை ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், எதிரிகள் தரப்பு வழக்கு நிரூபிக்கப்படவில்லை எனவும், புகார்தாரர் தனது வழக்கினை சட்டப்படி நிரூபித்துள்ளதாகவும், எதிரிகள் தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும், எதிரி தரப்பு நிறுவனம் கம்பெனி சட்டப்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம் கிடையாது என்றும், எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனையும், புகார்தாரருக்கு உரிய இழப்பீடும் வழங்கி தீர்ப்பளிக்குமாறும் புகார்மனுவை ஒத்திசைந்து வாதிட்டுள்ளார்.



K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:56:38 +0530

14. எதிரிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இது பொய் வழக்கு என்றும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிகள், புகார்தாரரிடமிருந்து புகாரில் குறிப்பிட்டுள்ளபடி எந்தவித கடனும் பெறவில்லை என்றும், புகாரிலுள்ள குற்றச்சாட்டுக்களை மறுப்பதாகவும், புகார்தாரரின் வழக்கு முரண்பாடாக இருப்பதாகவும், எதிரியின் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கப்படவில்லை என்றும், புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சீட்டு ரசீதுகள் போலியானது என்றும், எதிரி நிறுவனம் முதன்மையான எதிரியாக இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் வாதிட்டுள்ளார். எதிரி தரப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் Aneeta Hada V. M/s. Godfather Travels and Tours Pvt. Ltd Anil Hada v. M/s. Godfather Travels and Tours Pvt. Ltd Avnish Bajaj v. State Ebay India Pvt. Ltd v. State and Anr [AIR 2012 SC 2795], மாண்புமிகு உச்சநீதிமன்றம் Dilip Hariramani Vs. Bank of baroda [2022 LiveLaw (SC) 457], மாண்புமிகு உச்சநீதிமன்றம் N. Harihara Krishnan Vs. J. Thomas [2018 CRI. L. J. 72] ஆகிய தீர்ப்புரைகள் சுட்டிக்காட்டி வாதிடப்பட்டுள்ளது.

**இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், புகார்தாரர் தரப்பு வழக்கானது எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை தகு நிலை ஐயப்பட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?**

15. புகார்தாரர் பெயருக்கு வரையப்பட்ட 29.11.2017 தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, பார்வதிபுரம் நாகர்கோவில் கிளையின் ரூ.17,75,000/-ற்கான காசோலை எண்.723019 கொண்ட (பு.சா.ஆ.1) காசோலையை, ஆக்சிஸ் வங்கி, கோவில்பட்டி கிளையில் 18.12.2017 அன்று வசூலுக்கு தாக்கல் செய்தபோது பு.சா.ஆ.1 காசோலையானது "Funds Insufficient" என்ற காரணம் குறிப்பிட்டு 19.12.2017 அன்று (பு.சா.ஆ.2) குறிப்பாணை மூலம் திருப்பப்பட்டுள்ளது. புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிகளுக்கு 17.01.2018 தேதியிட்ட சட்ட அறிவிப்புகள் (பு.சா.ஆ.3)ஐ அனுப்பியுள்ளார். மேற்படி 1வது எதிரிக்கு அனுப்பப்பட்ட பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பானது 18.01.2018 ம் தேதியிட்ட அஞ்சலக உறை (பு.சா.ஆ.4) மூலம் திருப்பப்பட்டுள்ளது.

16. புகார்தாரர் இந்த வழக்கை 12.03.2018 அன்று இந்த நீதிமன்றத்தில் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார். எனவே மேற்படி கால தாமதத்தை மன்னிக்க கோரி புகார்தாரர் தாக்கல் செய்த Crl.M.P.No.610/2021



K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:56:44 +0530

மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவுகள் 138 மற்றும் 142 ன் கீழான சட்டப்பூர்வமான நிபந்தனைகளை கடைபிடித்துள்ளார்.

17. சட்டப்பூர்வமான கடனுக்காகத்தான் காசோலை வரையப்பட்டது என்று மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவுகள் 118 (a) மற்றும் 139 ன் கீழ் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்படுகிறது. மேற்படி அனுமானத்தை எதிரிகளால் மறுதளிக்க முடியும். பு.சா.ஆ.1 காசோலை எதிரிகளினுடையது இல்லை என்று எதிரிகள் தரப்பில் மறுக்கவில்லை. இந்த வழக்கு பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும் புகார்தாரர், எதிரிகளுக்கு அனுப்பிய பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்புகளும் எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான தேவைகளை நிறைவேற்றியுள்ள நிலையில் மாற்றுமுறையாவணச்சட்டப்பிரிவு 139 கீழான அனுமானம் முதல்நோக்கில் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்படுகிறது.

18. மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றம் M/s. laxmi Dyechem (Vs) State of Gujarat & Ors. ( 2013 CRI.L.J. 3288) என்ற வழக்கில்,

" Therefore if the accused is able to establish a probable defence which creates doubt about the existence of a legally enforceable debt or liability, the prosecution can Fail. The accused can rely on the materials submitted by the complainant in order to raise such defence and it is inconceivable that in some cases the accused may not need to adduce the evidence of his/her own. If however, the accused/drawer of a cheque in question neither raises a probable defence nor able to contest existence of a legally enforceable debt or liability, obviously statutory presumption under Section 139 of the NI Act regarding commission of the offence comes into play if the same is not rebutted with regard to the materials submitted by the complainant" என்று தீர்ப்பளித்துள்ளது.

19. புகார்தாரர் சார்பாக முதல் நோக்கில் அனுமானிக்கப்படும்போது, பு.சா.ஆ.1 காசோலை சட்டப்பூர்வமான கடனுக்காக வழங்கப்படவில்லை என்று நிரூபிக்கும் சுமை எதிரிகள் மேல் உள்ளது. குவி.மு.ச 255(2)ன் கீழ் இந்நீதிமன்றம் எதிரிகளிடம் கேள்வி கேட்டபோது எதிரிகள் தரப்பில் பொய் சாட்சி என்று மறுப்பு தெரிவிக்கப்பட்டதை மட்டும் வைத்து சட்டப்பூர்வமான அனுமானத்தை எதிரிகள் மறுதளித்ததாக கருதமுடியாது. ஏனென்றால் எதிரிகள் உறுதியான எதிர்வாதத்தை நிரூபிப்பதன் மூலமே சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுதளிக்கமுடியும்.



K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:56:52 +0530

20. குவி.மு.ச 313(1)(b)–ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்டபோது எதிரிகள் தரப்பில் பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்தை 1வது எதிரியினுடையது இல்லை என்றும், பு.சா.ஆ.1 காசோலை எதிரிகளினுடைய வங்கிக் கணக்கிலிருந்து வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டு மறுக்கவில்லை. புகார்தாரர் தன்னை பு.சா.1 ஆக விசாரித்து பு.சா.ஆ.2 குறிப்பாணை மூலம் பு.சா.ஆ.1 காசோலை எதிரிகள் வங்கி கணக்கில் "Funds Insufficient" என்ற காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளது என்பதை புகார்தாரர் நிரூபித்துள்ளார். புகார்தாரர் சட்டப்பூர்வமான அறிவிப்பு (பு.சா.ஆ.3)ஐ எதிரிகளுக்கு குறித்த காலக்கெடுவுக்குள் அனுப்பியுள்ளார் என்பதை திருப்பப்பட்ட அஞ்சலக உறை (பு.சா.ஆ.4) மூலம் நிரூபித்துள்ளார். இந்த வழக்கில் 2வது எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பிற்கான ஒப்புதல் அட்டை புகார்தாரர் தரப்பில் சான்றாவணமாக குறியிடப்படவில்லை.

21. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Indian Bank Association Case reported in 2014 (5) SCC 590 – என்ற வழக்கில் "We make it clear that if Provisos (a), (b) and (c) to section 138 of the Act are shown to have been complied with, technically the commission of the offence stands completed and it is for the accused to show that no offence could have been committed by him for specific reasons and defences" என்று தீர்ப்பளித்துள்ளது.

22. புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138ன் கீழான தேவைகளை நிறைவேற்றியுள்ள நிலையில் முதல் நோக்கில் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்பட்டு எதிரிகள் தான் குற்றம் நடக்கவில்லை என்று அனுமானத்தை மறுதளிக்கவேண்டும். புகார்தாரர் தனது புகார் மனுவை ஒத்து முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரிகள் தரப்பில் மறுக்கவில்லை என்பதால் எதிரிகள் மீது பொறுப்புநிலை ஏற்படுகிறது. பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரிகள் தரப்பில் ஒத்துக்கொள்ளும்போது அதனால் எற்படும் அனுமானத்தை மறுதளிக்க வேண்டிய பொறுப்பு எதிரிகளின் மேல் உள்ளது.

23. மேற்படி 1வது எதிரியின் சீட்டு கம்பெனியை ஒரு எதிரியாக சேர்க்கவில்லை என்பதால் இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்று எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டுள்ளார். புகார் மனுவில் 1வது எதிரியாக மேற்படி சீட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பவுல்தாஸ் சேர்க்கப்பட்ட நிலையில் 2வது எதிரியாக நிர்வாக இயக்குநர், வசந்த குமாரி சிட் பண்ட் Private Limited என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:56:59 +0530

ஆனால் மேற்படி சீட்டு கம்பெனி மூலமாக 1 வது எதிரி என்று புகார் மனுவில் குறிப்பிடப்படவில்லை என்பதால் இந்த வழக்கில் மேற்படி சீட்டு கம்பெனி எதிரியாக சேர்க்கப்படவில்லை என்று எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டுள்ளார். புகார்தாரரின் புகார் மனுவை கவனமாக ஆராயும் போது 1 வது எதிரியாக நிர்வாக இயக்குநரையும், 2 வது எதிரியாக நிறுவனத்தையும் சேர்த்துள்ளது வெளிப்படுகிறது. மேலும் 1 வது எதிரி நிர்வாக இயக்குநராக இருக்கும்போது 2 வது எதிரியாக மேற்படி சீட்டு கம்பெனியை தான் குறிக்கும். புகார் மனுவில் மேற்படி சீட்டு கம்பெனி மூலமாக நிர்வாக இயக்குநர் என்று குறிப்பிடவில்லை என்பதை வைத்து மட்டும் புகார்தாரர் தரப்பு வழக்கை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி நிர்வாக இயக்குநர் 1 வது எதிரியாக இருக்கும்போது, 2 வது எதிரி என்பது மேற்படி சீட்டு கம்பெனியை தான் குறிக்கிறது.

24. மேற்படி சீட்டு கடன் தொகைக்கான புகார்தாரரின் மூல வருமான ஆதாரம் தொடர்பாக, புகார்தாரரின் வங்கிக் கணக்கு அறிக்கையை தவிர்த்து வேறு எந்த ஆவணமும் புகார்தாரர் தரப்பில் குறியிடப்படவில்லை. புகார்தாரரின் வங்கி கணக்கு அறிக்கையான பு.சா.ஆ.6 ன் மூலம் கடந்த 18.09.2017 அன்றும், 25.10.2017 அன்றும், 1 வது எதிரிக்கு, புகார்தாரரின் வங்கி கணக்கிலிருந்து தவணைத் தொகை செலுத்தி உள்ளது வெளிப்படுகிறது. மேலும் பு.சா.ஆ.6 ஐ பார்வையிடும் போது, புகார்தாரரின் வங்கி கணக்கில் பெரிய தொகைகள் பண பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளது வெளிப்படுகிறது. புகார்தாரின் சட்ட அறிவிப்பிற்கும், புகார் மனுவிற்கும், முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்திற்கும் எந்தவித முரண்பாடுகளும் காணப்படவில்லை. இந்த வழக்கில் புகார்தாரரை, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து எந்த முரண்பாடுகளும் கொண்டுவரப்படவில்லை. மேலும் எதிரிகள் தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்பது எதிரிகளுக்கு பாதகமாக அமைகிறது. பு.சா.ஆ.1 காசோலையை பார்வையிடும்போது 2 வது எதிரி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் என்ற முறையில் 1–ம் எதிரி கையொப்பம் செய்துள்ளது வெளிப்படுகிறது. மேற்படி 2 வது எதிரி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், 1 வது எதிரி என்று எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை என்பதால் 2 வது எதிரி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தான் 1 வது எதிரி என்பது வெளிப்படுகிறது.

25. புகார்தாரர் 1 வது எதிரியின், 2 வது எதிரி நிறுவனத்தில் செலுத்தியதற்கான சீட்டு தவணை தொகைக்கான பு.சா.ஆ.5 ரசீதுகளை தாக்கல் செய்துள்ளார். புகார்தாரர் தரப்பில் 1 வது எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு, அவர் அந்த முகவரியை விட்டு சென்றுவிட்டதால் அவருக்கு



K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:57:05 +0530

சார்பு செய்யப்படாமல் திருப்பப்பட்டுள்ள நிலையில், மேற்படி சட்ட அறிவிப்புக்கு எந்தவித பதிலறிப்பையும் 1வது எதிரி அனுப்பவில்லை. மேலும் எதிரிகள் தரப்பில் சட்ட அறிவிப்பு சார்பு செய்யப்படவில்லை என்று எதிர்வாதம் எடுக்கவில்லை என்பதால் 2வது எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் ஒப்புதல் அட்டையை அல்லது அஞ்சலக உறையை புகார்தாரர் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பது புகார்தாரர் தரப்பு வழக்கை பாதிக்கவில்லை. இந்த வழக்கில் புகார்தாரர் தரப்பின் வாதத்தை எதிர்த்து, எதிரிகள் தரப்பில் எந்தவித எதிர்வாதமும் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்து எடுத்துரைக்கப்படவில்லை.

26. எதிரிகள் உண்மையில் குற்ற சம்பவத்தில் ஈடுபடாமல் இருந்திருந்தால், புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்து ஏதாவது முரண்பாடுகளை எதிரிகள் தரப்பில் கொண்டு வந்திருப்பார்கள். மேலும் எதிரிகள் புகார்தாரரின் வழக்கை எதிர்த்து எதிர்வாதம் எடுக்கவில்லை என்பது புகார்தாரருக்கு சாதகமாக அமைகிறது. புகார்தாரருக்கு சார்பாக உள்ள அனுமானத்தை மறுத்தலிப்பதற்கு எதிரிகள் தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்து எந்தவித எதிர்வாதமும் எடுத்துரைக்கப்படவில்லை. பு.சா.ஆ.1 காசோலைக்கு அனுசரணையாக பு.சா.ஆ.5 சீட்டுத் தொகை கட்டிய ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது புகார்தாரரின் வழக்கின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. 2வது எதிரியின் சீட்டு நிறுவனம் சம்பந்தமாக எந்தவித ஆவணத்தையும் புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி பெரிய காசோலை தொகைக்கான வருமான மூல ஆதாரத்தை புகார்தாரர் தாக்கல் செய்யவில்லை என்பது வைத்து மட்டும் புகார்தாரர் தரப்பு வழக்கை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. எதிரிகள் உண்மையில் குற்ற சம்பவத்தில் ஈடுபடாமல் இருந்தால் எதிரிகள் தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்திருப்பார்கள்.

27. புகார்தாரர் எந்தவித முரண்பாடுகளுமின்றி சாட்சியமளித்துள்ளதாலும், எதிரிகள் தரப்பில் எந்தவித புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்து எதிர்வாதமும் எடுத்துரைக்கப்படவில்லை என்பதாலும், எதிரிகள் தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்து எந்தவித முரண்பாடுகளும் கொண்டுவரப்படவில்லை என்பதாலும், புகார்தாரர் சீட்டு தொகையை செலுத்தியதற்கான அசல் ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாலும், புகார்தாரரின் வங்கி கணக்கு அறிக்கையில் பெரிய தொகைகள் பண பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளதாலும், 2வது எதிரி நிறுவனத்தின் நிர்வாகம் இயக்குநர் என்ற முறையில் 1வது எதிரி காசோலையில் கையொப்பம்



K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:57:12 +0530

செய்துள்ளதாலும் புகார்தாரர் தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.

28. மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் புகார்தாரர் தரப்பில் எதிரிகளுக்கு எதிரான மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டு, எதிரிகள் மாற்றுமுறையாவணச்சட்டப் பிரிவு 138 ன் கீழ் குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

29. இவ்வழக்கானது காசோலை மோசடி வழக்கு என்பதாலும், எதிரிகளின் குற்ற செய்கைகளினால் புகார்தாரர் பாதிக்கப்பட்டு பண இழப்பு ஏற்பட்டுள்ளதாலும், இவ்வழக்கில் எதிரிகளுக்கு குற்றவாளிகளுக்கான நன்னடத்தைச் சட்டத்தின் பயனை வழங்குவது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>இறுதியாக</u>**

30. இறுதியாக எதிரிகள் மீது மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138 ன் கீழான குற்றத்திற்கு தலா ஆறு மாதங்கள் (6) கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், மேலும், இவ்வழக்கில் வழக்கு காசோலைக்கான தொகை ரூ.17,75,000/- என்பதை கருத்திற்கொண்டும், இவ்வழக்கு 2018 ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு 7 வருடத்திற்கு மேலாக நிலுவையில் இருந்து வருவதை கருத்திற்கொண்டும், 7 வருடங்களாக புகார்தாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலை கருத்திற்கொண்டும், எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 357(3)ன் படி காசோலைக்கான தொகை ரூ.17,75,000/- (ரூபாய் பதினேழு இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) ஐ 9% ஆண்டு வட்டியுடன் சேர்த்து காசோலை திருப்பப்பட்ட நாளான 19.12.2017 முதல் காசோலைக்கான தொகையை திருப்பி கொடுக்கும் வரையிலான தேதி வரை கணக்கிட்டு மொத்த இழப்பீடாக புகார்தாரருக்கு கொடுக்கவேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தத்தவறும் பட்சத்தில் எதிரிகளுக்கு கூடுதலாக தலா மூன்று மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும் குவி.மு.ச 255(2)ன் படி தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் மேற்படி இழப்பீட்டு தொகையை செலுத்த தவறும்பட்சத்தில் மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138-ன் கீழான தண்டனையை அனுபவித்த பிறகு, மேற்படி இழப்பீட்டு தொகையை செலுத்த தவறினால் விதிக்கப்படும் மேற்படி தண்டனையை எதிரிகள் ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும். இந்த வழக்கில் இழப்பீட்டு தொகை



K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:57:19 +0530

உத்தரவிடப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அபராதம் விதிக்கப்படவில்லை. இன்று எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் எதிரிகள் மீது பிடியாணை(NBW) பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதன் பிறகு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 வருடம் ஜீன் மாதம், 15–ம் தேதி திங்கள்கிழமை இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.15 13:57:24 +0530

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம்,**
**கோவில்பட்டி(மு.கூ.பொ).**

**இணைப்பு:**

**புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:**

| புகார்தாரர் தரப்பு சாட்சிகள் எண் | சாட்சிகளின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1. | P. மணிவண்ணன் | புகார்தாரர் – பு.சா.1 |

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர்/சான்றளித்தவர் |
|---|---|---|
| பு.சா.ஆ.1 | 29.11.2017 தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, பார்வதிபுரம் நாகர்கோவில் கிளையின் ரூ.17,75,000/–ற்கான காசோலை எண்.723019 கொண்ட காசோலை அசல் | பு.சா.1 – 22.07.2022 |
| பு.சா.ஆ.2 | 19.12.2017 ம் தேதியிட்ட ஆக்சிஸ் வங்கி, கோவில்பட்டி கிளையின் காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை கணினி வழி சான்று | பு.சா.1 – 22.07.2022 |
| பு.சா.ஆ.3 | 17.01.2018 தேதியிட்ட எதிரிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்கள் மற்றும் இரண்டு அஞ்சலக ரசீதுகள் அசல் | பு.சா.1 – 22.07.2022 |



K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.15 13:57:29 +0530

| | | |
|---|---|---|
| பு.சா.ஆ.4 | 18.01.2018 தேதியிட்ட 1வது எதிரியின் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் | பு.சா.1 – 22.07.2022 |
| பு.சா.ஆ.5 | 2016–2017 வரையிலான எதிரிகள் நிறுவனம் புகார்தாரருக்கு வழங்கிய சீட்டு ரசீதுகள்–19 வரிசைகள் அசல் | பு.சா.1 – 22.07.2022 |
| பு.சா.ஆ.6 | 01.04.2017 முதல் 27.11.2017 வரையுள்ள புகார்தாரரின் பேங்க் ஆஃப் இந்தியா, கோவில்பட்டி கிளையின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் | பு.சா.1 – 22.07.2022 |

**சாட்சிகள் தரப்பு சான்றாவணம்:இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சிகள்: இல்லை**

**எதிரிகள் தரப்பு சான்றாவணம்:இல்லை**

குறிப்பு:

1. தீர்ப்பு பகரப்பட்ட அன்று எதிரிகள் ஆஜராகவில்லை என்பதால் எதிரிகள் மீது பிடியாணை(NBW) பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது.

2. புகார்தார்ருக்கு செலுத்தவேண்டிய இழப்பீட்டுத் தொகையை எதிரிகள் செலுத்தவில்லை.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.15 13:57:40 +0530

**நீதித்துறை நடுவர்**
**விரைவு நீதிமன்றம்(நடுவர் நிலை)**
**கோவில்பட்டி(மு.கூ.பொ).**